**வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 4379 /ஆ4/2025, நாள். .02.2026**

**பொருள்–** தேர்வுகள் – மேல்நிலைப் பொதுத் தேர்வு – மார்ச்/ஏப்ரல் 2026 மேல்நிலை முதலாமாண்டு (Arrear) மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் – மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கான "சொல்வதை எழுதுபவர்களுக்கான பயிற்சி" (Scribe) – தொடர்பாக.

**பார்வை –** அரசுத் தேர்வுகள் இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 அவர்களின் கடித ந.க.எண்.213460/பி1/2024, நாள்.02.02.2026.

****************

பார்வையில் காணும் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி மார்ச்/ஏப்ரல் 2026 நடைபெறவுள்ள மேல்நிலை முதலாமாண்டு (Arrear) / இரண்டாமாண்டு மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகளுக்கு மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கான சொல்வதை எழுதுபவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தால் (DIET) பயிற்சி அளித்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இராணிப்பேட்டை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தால் (DIET) பயிற்சி 27.02.2026 அன்று பிற்பகல் 2 மணிக்கு வேலூர் சத்துவாச்சாரி, ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கூட்ட அரங்கில் நடைபெறும் இத்துடன் இணைப்பில் காணும் ஆசிரியர்களை சொல்வதை எழுதுபவர்களுக்கான பயிற்சிக்கு விடுவித்து அனுப்பிட சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு –** சொல்வதை எழுதுபவர் பட்டியல்

**//ஓம்.//**
**முதன்மைக் கல்வி அலுவலர்**
வேலூர்.

**பெறுநர்** :
சார்ந்த ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம் (தலைமையாசிரியர் மூலமாக).

**நகல்**
முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், இராணிப்பேட்டை.